வாரம் - 8 ஊக்கப் பாடல் எண் - 8

# மொழி வாழ்த்து

அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே ! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

மொழி வாழ்த்து பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# வினைச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| READ | = | படி |
| ACT | = | நடி |
| TAKE | = | எடு |
| GIVE | = | கொடு |
| SING | = | பாடு |
| SPEAK | = | பேசு |

வினைச் சொற்களோடு "ங்க" என்ற சொல்லை இணைத்துச் சொல்லுதல் மரியாதைச் சொற்களாக இருக்கும்

படிங்க, நடிங்க, எடுங்க, கொடுங்க, பாடுங்க, பேசுங்க

## உறவுச் சொற்கள் + வினைச் சொற்கள்

| | |
|---|---|
| படிங்க | நடிங்க |
| எடுங்க | கொடுங்க |
| பாடுங்க | பேசுங்க |

| | | |
|---|---|---|
| அம்மா | அப்பா | அண்ணன் |
| தம்பி | அக்காள் | தங்கை |

அம்மா கொடுங்க அப்பா பேசுங்க

தங்கை படிங்க அண்ணா பாடுங்க

அக்கா நடிங்க அக்கா எடுங்க

தம்பி கொடுங்க அண்ணா பேசுங்க

அண்ணா வாங்க படிங்க

அப்பா கொடுங்க நன்றி

**பொருள் உணர்ந்து பேசப் பயிற்றுவிக்கவும்**




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

## வாரம் - 8

**மாணவர் செயற்பாடு எண் - 1**

**மாணவர் பெயர் ........................................ நிலை............ நாள்................**

( கற்றுக்கொண்ட ந ந் எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| ந | ந் | ந | ந் | ந | ந் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 8

## மாணவர் செயற்பாடு எண் - 2

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ந ந் எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

நா நெ நே நோ - எழுத்துகளில் உள்ள ந வை வட்டமிட்டாலும் சரியே

'நம்புவதே வழி' என்ற மறைதனை நாம் இன்று நம்பி விட்டோம்' என்ற பாரதியாரின் கவிதை வரியை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறோம். அரசியலில் எதுவும் சாத்தியம்; எவருக்கும் வழியும் கிடையாது, மறையும் கிடையாது என்று நம்ப வைத்துள்ளது தற்போதைய அரசியல் போக்கு.

எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும், எப்படியும் மே 13ம் தேதிக்குப் பின், மக்களை முட்டாளாக்கத்தான் போகின்றனர். அதைத் தாங்கும் அளவுக்கு மக்களுக்கு ஒரு மனோதைரியத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் விளைவே முதல் பக்க செய்தி. ஒருவேளை உண்மையிலேயே இப்படி ஒரு சந்திப்பு நடந்துவிட்டால், 'தினமலர்' பொறுப்பல்ல.

'அரசியல்வாதிகளைப் போல் நீங்களும் எங்களை முட்டாளாக்கலாமா' என்று கோபப்படும் வாசகர்களுக்கு, ஏப்ரல் முதல் நாள் வாழ்த்துக்கள்...!

### ரீவைண்ட்

# நன்றியும்... கருணாநிதியும்...

**: நெல்லைக்கண்ணன் :**

கடந்த 1967ம் ஆண்டு தேர்தலில், காங்கிரஸ் கட்சி தோற்றுப் போனது. காமராஜரைப் பார்க்க வந்த நண்பர்கள், 'தமிழக மக்களுக்கு நன்றி இல்லை' என்றனர். காமராஜர் கேட்டார், 'என்ன நன்றி இல்லை, சொல்லுங்க' என்றார். 'இல்லை... இத்தனை நன்மை செய்தும் உங்களைக் கூட தோற்க வச்சிட்டாங்களே' என்றனர் நண்பர்கள்.

'என்ன முட்டாள்தனமாப் பேசுற. ஒரு லட்சம் மக்கள் போய் சட்டசபையில் உட்கார முடியாதுங்கிறதாலே தான் எம்.எல்.ஏ.,வைத் தேர்ந்தெடுத்து அனுப்புறாங்க. அவங்களுக்குச் சம்பளமும் தர்றாங்க. அவங்க முதல்வரைத் தேர்ந்தெடுக்கிறாங்க. எனக்கும் சம்பளம் தந்தாங்க. நாங்க வேலை பார்த்தோம். அவங்க தான் நமக்கு எஜமானர். பிடிக்கல; மாத்திட்டாங்க. எஜமான் நன்றியா இருக்கணும்னு வேலைக்காரன் நினைக்கிறது என்ன நியாயம்?' என்று கேட்டார்.

ஆனால் கருணாநிதியோ, 'மக்கள் தனக்கு நன்றி செய்ய வேண்டும்' என்றார். அவர் என்னவெல்லாமோ செய்துவிட்டாராம். அதற்காக தமிழக மக்கள் அவருக்கு ஓட்டளித்து, அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டுமாம்; தமிழர் பண்பாடு உதவுவது தான்; திரும்ப எனக்கு நன்றி செய் என்று, நல்ல தமிழர்கள் கேட்க மாட்டார்கள்.

கருணாநிதி கேட்கிறார்.

மக்கள் என்றால், அழகிரியும், ஸ்டாலினும், கனிமொழியும் என்றால் புரிகிறது. ஏனென்றால், அவர்கள் உங்களுக்கு நன்றி சொல்லித் தான் தீர வேண்டும். காமராஜர் வரை, ஏழை மக்களை அழிக்கும், மது வகைகளை, தமிழகத்திலே அனுமதிக்க மறுத்தார். அண்ணாத்துரையும் சொன்னார், 'கோடிக்கணக்கான பண வருமானம் என்கிறபோதே, அதன் பின்னால் உள்ள கோடிக்கணக்கான ஏழைத் தாய்மார்களின் கண்ணீர் எனக்கு தெரிகிறது. ஆகவே, மதுக் கடைகளை திறக்கவே மாட்டேன்' என்றார்.

ஏழை உழைப்பாளிகள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் அனைவரின் உழைப்பையும், டாஸ்மாக் கடைகள் மூலமாகப் பறித்து, அவற்றையே இலவசமாகத் தந்து, அவர்களுக்கு ஏதோ பெரிய நன்மை செய்தது போல் நடிக்கிறாரே, அதற்கு நன்றியை எதிர்பார்க்கிறாரா கருணாநிதி?

ஒரு பட்டம் வாங்கிவிட்டு, நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தால், பிழைப்பிற்காக ஊர் ஊராக கேபிள் தொழிலால் வாழ்ந்து கொண்டிருந்த வாலிபர்களின் வயிற்றிலடித்து, அவற்றையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்களே, அதற்கு நன்றி தெரிவிக்கச் சொல்கிறீர்களா?

காங்கிரஸ் கட்சியின் ஆதரவில், வெறும் 99 எம்.எல்.ஏ.,க்களை வைத்துக் கொண்டு, ஐந்து ஆண்டு காங்கிரசாருக்கு எந்தப் பதவியும் தராமல், நீங்கள் மட்டும் எல்லாச் சுகங்களையும் அனுபவித்தீர்களே, அதற்கு நன்றி சொல்லச் சொல்கிறீர்களா?

உங்கள் துணை தேவை என்றவுடன், மத்தியில் நான்கு தினங்கள் நாடகங்கள் நடத்தி, தங்களை தந்தை என்றழைத்த சோனியாவையும், அவர் கட்சியையும் அவமானப்படுத்தி, அமைச்சர் பதவிகளை பெற்றீர்களே, அதற்கு நன்றி சொல்லவா?

யாரும் திரைப்படமே எடுக்க முடியாதபடி, தங்கள் பேரன்கள் நடத்தும் செயலுக்கு நன்றி தெரிவிக்கச் சொல்லுகிறீர்களா?

'ஒவ்வொரு விழாக்கள் நடைபெறும் போது, திரைப்படத் துறையினரை கட்டாயப்படுத்தியும், மிரட்டியும் அழைக்கின்றனர்' என்று நடிகர் அஜீத், உங்கள் முன்னிலையிலே குற்றம் சாட்டியபோது, உங்கள் நண்பர் ரஜினி, தன்னை மறந்து எழுந்து கைதட்டினாரே... உடனே அஜித், உங்கள் வீட்டிற்கே வரவைக்கப்பட்டாரே; அதற்கு நன்றி தெரிவிக்கவா?

'இனிய உளவாக இன்னாத கூறல்' என்ற குறளுக்கு உரையெழுதிய உங்களை வைத்துக் கொண்டு நடிகர் வடிவேலு, விஜயகாந்தை பேசிய பண்பான பேச்சுக்களுக்காக, உங்களுக்கு நன்றி தெரிவிக்கவா?

பழ.கருப்பையா தாக்கப்பட்டதற்கும், தா.பாண்டியன் வீடு தாக்கப்பட்டதற்கும் நன்றி தெரிவிக்கவா?

எதற்கு நன்றியை எதிர்பார்க்கிறார் கருணாநிதி?

பகவான் சாய்பாபாவை தன் வீட்டிற்கே வரவழைத்து, தன் துணைவியார், அவரை வணங்கச் செய்த பகுத்தறிவுப் போர்க் குணத்திற்கும், சாய்பாபாவிடம் துரைமுருகன் மோதிரம் பெற்றதற்கும், நிச்சயம் வீரமணி வேண்டுமானால், நன்றி தெரிவிக்கக் கூடும்!

# வாரம் - 8

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... **நிலை**........... **நாள்**...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

## நினைவூட்டல் -


**சச் ச்ச மச மச சம சம மச் பச்**

**சட சட பச பச சப் சட் சட**

**கக் க்க டக் பக் சக் மக் சக மக**

**தத் த்த தட மத கத் பத் பத**

**நக பந் நட நத நத் சந கந**


7

நந் ந்ந

நட நம்

நகம் நட்டம்

பந்தம் தந்தம்

சந்தம் நடந்த

கந்தகம்

# வாரம் - 8

## வீட்டு வேலை எண் - 1

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

# ச ச் , க க் , த த் , ந ந்

( எட்டு எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

'நம்புவதே வழி' என்ற மறைதனை நாம் இன்று நம்பி விட்டோம்' என்ற பாரதியாரின் கவிதை வரியை வாசகர் களுக்கு நினைவுபடுத்துகிறோம். அரசியலில் எதுவும் சாத்தி யம்; எவருக்கும் வழியும் கிடையாது, மறையும் கிடையாது என்று நம்ப வைத்துள்ளது தற்போதைய அரசியல் போக்கு.

எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும், எப்படியும் மே 13ம் தேதிக்குப் பின், மக்களை முட்டாளாக்கத்தான் போகின்றனர். அதைத் தாங்கும் அளவுக்கு மக்களுக்கு ஒரு மனோநிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் விளைவே முதல் பக்க செய்தி. ஒருவேளை உண்மையிலேயே இப்படி ஒரு சந்திப்பு நடந்துவிட்டால், 'தினமலர்' பொறுப்பல்ல.

'அரசியல்வாதிகளைப் போல் நீங்களும் எங்களை முட்டாளாக்கலாமா' என்று கோபப்படும் வாசகர்களுக்கு, ஏப்ரல் முதல் நாள் வாழ்த்துக்கள்...!

## ரீவைண்ட்

# நன்றியும்... கருணாநிதியும்...

**: நெல்லைக்கண்ணன் :**

கடந்த 1967ம் ஆண்டு தேர்தலில், காங்கிரஸ் கட்சி தோற்றுப் போனது. காமராஜரைப் பார்க்க வந்த நண்பர்கள், 'தமிழக மக்களுக்கு நன்றி இல்லை' என்ற னர். காமராஜர் கேட்டார், 'என்ன நன்றி இல்லை, சொல்லுங்க' என்றார். 'இல்லை... இத்தனை நன்மை செய்தும் உங்களைக் கூட தோற்க வச்சிட்டாங்களே' என்றனர் நண்பர்கள்.

'என்ன முட்டாள்தனமாப் பேசுற. ஒரு லட்சம் மக்கள் போய் சட்டசபை யில் உட்கார முடியாதுங்கிற தாலே தான் எம்.எல்.ஏ.,வைத் தேர்ந்தெடுத்து அனுப்புறாங்க. அவங்களுக்குச் சம்பளமும் தர் றாங்க. அவங்க முதல்வரைத் தேர்ந்தெடுக்கிறாங்க. எனக்கும் சம்பளம் தந்தாங்க. நாங்க வேலை பார்த்தோம். அவங்க தான் நமக்கு எஜமானர். பிடிக் கல; மாத்திட்டாங்க. எஜமான் நன்றியா இருக்கணும்னு வேலைக்காரன் நினைக்கிறது என்ன நியாயம்?' என்று கேட்டார்.

ஆனால் கருணாநிதியோ, 'மக்கள் தனக்கு நன்றி செய்ய வேண்டும்' என்றார். அவர் என்னவெல்லாமோ செய்துவிட்டா ராம். அதற்காக தமிழக மக்கள் அவருக்கு ஓட்டளித்து, அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டுமாம்; தமிழர் பண்பாடு உதவுவது தான்; திரும்ப எனக்கு நன்றி செய் என்று, நல்ல தமிழர்கள் கேட்க மாட் டார்கள்.

கருணாநிதி கேட்கிறார்.

மக்கள் என்றால், அழகிரியும், ஸ்டாலி னும், கனிமொழியும் என்றால் புரிகிறது. ஏனென்றால், அவர்கள் உங்களுக்கு நன்றி சொல்லித் தான் தீர வேண்டும். காமராஜர் வரை, ஏழை மக்களை அழிக்கும், மது வகைகளை, தமிழகத்திலே அனுமதிக்க மறுத்தார். அண்ணாத்துரையும் சொன் னார், 'கோடிக்கணக்கான பண வருமானம் என்கிறபோதே, அதன் பின்னால் உள்ள கோடிக்கணக்கான ஏழைத் தாய்மார்களின் கண்ணீர் எனக்கு தெரிகிறது. ஆகவே, மதுக் கடைகளை திறக்கவே மாட்டேன்' என்றார்.

ஏழை உழைப்பாளிகள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் அனைவரின் உழைப்பை யும், டாஸ்மாக் கடைகள் மூலமாகப் பறித்து, அவற்றையே இலவசமாகத் தந்து, அவர்களுக்கு ஏதோ பெரிய நன்மை செய் தது போல் நடிக்கிறாரே, அதற்கு நன்றியை எதிர்பார்க்கிறாரா கருணாநிதி?

ஒரு பட்டம் வாங்கிவிட்டு, நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத் தால், பிழைப்பிற்காக ஊர் ஊராக கேபிள் தொழிலால் வாழ்ந்து கொண்டிருந்த வாலிபர்களின் வயிற்றிலடித்து, அவற்றை யும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார் களே, அதற்கு நன்றி தெரிவிக்கச் சொல்கிறீர்களா?

காங்கிரஸ் கட்சியின் ஆதரவில், வெறும் 99 எம்.எல்.ஏ.,க்களை வைத்துக் கொண்டு, ஐந்து ஆண்டு காங்கிரசாருக்கு எந்தப் பத வியும் தராமல், நீங்கள் மட்டும் எல்லாச் சுகங்களையும் அனுபவித்தீர்களே, அதற்கு நன்றி சொல்லச் சொல்கிறீர்களா?

உங்கள் துணை தேவை என்றவுடன், மத்தியில் நான்கு தினங்கள் நாடகங்கள் நடத்தி, தங்களை தந்தை என்றழைத்த சோனியாவையும், அவர் கட்சியையும் அவமானப்படுத்தி, அமைச்சர் பதவிகளை பெற்றீர்களே, அதற்கு நன்றி சொல்லவா?

யாரும் திரைப்படமே எடுக்க முடியாத படி, தங்கள் பேரன்கள் நடத்தும் செயலுக்கு நன்றி தெரிவிக்கச் சொல்லுகிறீர்களா?

'ஒவ்வொரு விழாக்கள் நடைபெறும் போது, திரைப்படத் துறையினரை கட்டா யப்படுத்தியும், மிரட்டியும் அழைக்கின்ற னர்' என்று நடிகர் அஜீத், உங்கள் முன்னி லையிலே குற்றம் சாட்டியபோது, உங்கள் நண்பர் ரஜினி, தன்னை மறந்து எழுந்து கைதட்டினாரே... உடனே அஜித், உங்கள் வீட்டிற்கே வரவைக்கப்பட்டாரே; அதற்கு நன்றி தெரிவிக்கவா?

'இனிய உளவாக இன்னாத கூறல்' என்ற குறளுக்கு உரையெழுதிய உங் களை வைத்துக் கொண்டு நடிகர் வடி வேலு, விஜயகாந்தை பேசிய பண்பான பேச்சுக்களுக்காக, உங்களுக்கு நன்றி தெரிவிக்கவா?

பழ.கருப்பையா தாக்கப்பட்டதற்கும், தா.பாண்டியன் வீடு தாக்கப்பட்டதற்கும் நன்றி தெரிவிக்கவா?

எதற்கு நன்றியை எதிர்பார்க்கிறார் கருணாநிதி?

பகவான் சாய்பாபாவை தன் வீட்டிற்கே வரவழைத்து, தன் துணைவியார், அவரை வணங்கச் செய்த பகுத்தறிவுப் போர்க் குணத்திற்கும், சாய்பாபாவிடம் துரைமுருகன் மோதிரம் பெற்றதற்கும், நிச்சயம் வீரமணி வேண்டுமானால், நன்றி தெரிவிக்கக் கூடும்!

# வாரம் - 8

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ........................................ நிலை............ நாள்................**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )

(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க<br>க் | த<br>த் | ந | ந் | ந | ந் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |